முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கணநாதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

27.02.2019, புதன்கிழமை

1. **அருட்குருவே ஆறுமுக அரங்கா**
**அன்னதான வள்ளலே தேசிகா**
**பெருமளவில் தருமசிந்தை வளர**
**பெருந்தயவு காட்டும் குருராசா**
2. அரசனே ஆறுமுகன் சக்தியாக வந்த
அரங்கனே கலிஇடர் போக்கும் குருவே
தரணியிலே உன் பெருமை கூறி
தாமுரைப்பேன் **விளம்பி சாலின் திங்கள்**
3. **திங்களிலே மூவை திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 15ம் நாள் 27.02.2019, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு நித்ய பிரசன்ன ஆசியை**
**இங்கனமே கணநாதர் யானும்**
இயம்பிடுவேன் உலக மக்கள் நலமுற
4. நலம் தரும் அரங்கன் தருமம்
நாலா திக்கும் பரவி வருக
பலம் கூடி மக்களிடை சக்தி
பரவுவதுடன் ஒற்றுமை உயர்வு
5. உயர்வான குணநலம் பெருகி
உலக மக்களெல்லாம் அரங்கன் பெருமை
தயவை அறிந்து தெளிந்துமே
தன்னார்வ தொண்டுகள் சிறந்துமே
6. சிறந்துமே தமிழகம் தொட்டு
செழுமை பரதம் காண்கும்
பரந்த பேருலகே தயவு பெருகி
பசி பிணி துன்பம் விலகும்
7. விலகியே பேருலகம் எங்கும்
விரைந்து அரங்கமகா ஞானி
வேலவன் வழிபாடு தலைமை பெருகி
வேற்றுமை என்பது இல்லா உலகம் ஆகும்
8. ஆகவே அறச்சேவை ஆற்றி
அனைத்து தேசமும் திரும்பும்படி
யுகமாற்றம் குறித்த மகத்துவம்
உயர்வாகச் செய்யும் அரங்கன்
9. அரங்கன் வழிக்கு மக்கள் வர
அருட்பெருஞ் சரவண சோதி கண்டு
வரங்கள்தனை வணங்கி கேட்க
வாழும் ஞானி ஏழாம் படை வீட்டிலிருந்து
10. இருந்துமே அரங்கன் வடிவில்
எல்லா சக்திகளும் அருள்புரிய

மருந்தென பிணி சோடை விலக
மண்டியிட்டு வரும் மக்கள் வாழ்வில்

11. வாழ்வில் அமைதி பாதுகாப்பும்
வல்லமையும் வசதி வளமும்
ஊழ் வெல்லும் சக்தியும் திடமும்
உலகை ஆளும் ஞானமும் அடைவர் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கணநாதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

அருள்பலம்மிக்க அருட்குருவே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அளவற்ற அன்னதானம் செய்து உலக உயிர்களை காக்கின்ற அன்னதான வள்ளல் ஞானியே ஞானதேசிகனே அரங்கமகா தேசிகனே உலகமெலாம் தருமசிந்தை வளர்ந்திடவே உலக மக்களுக்கு பெரும் தயவினை காட்டி வழிநடத்துகின்ற மகா குருவே குருநாதனே குருராசனே அரங்கமகா தேசிகனே ஆதி ஞானத்தலைவன் முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த அரங்கமகா தேசிகனே கலியுகத்தின் துன்பங்களை போக்கி மக்களைக் காக்கின்ற ஞானகுருவே இவ்வுலகமெலாம் உமது பெருமைகளை கூறியே உலக மக்கள் நலம்பெற வேண்டி **விளம்பி வருடம் மாசி மாதம் 15ஆம் நாள் 27.02.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கணநாதர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கணநாதர்.

சர்வ நலத்தினையும் தரும் வல்லமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தருமங்கள் உலகின் எல்லா திசைகளிலும் பரவி, உலகமெலாம் தருமங்கள் நடந்திட நடந்திட, மக்களுக்கு தர்மபலம் பெருகி தர்மபலம் உலகமெலாம் பரவி மக்களிடையே உள்ள வேற்றுமைகள் எல்லாம் மறைந்து ஒற்றுமைகள் பெருகி உயர்வான குணப்பண்புகளை மக்கள் அதிகமாக பெற்று உலக மக்களெல்லாம் கலியுக அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருமைகளையும், பெருமைகளையும், ஆற்றலையும் அறிந்து தெளிந்து மக்களிடம் தன்னார்வம்மிக்க தொண்டுகள் பெருகி சுயநலம் மறைந்து பொதுநலம் பெருகி தமிழகத்திலிருந்து பெரும் மாற்றங்கள் துவங்கி வளமான நாடாய் தமிழகம் முதலாய் மாற ஆரம்பித்து இந்த பாரத தேசம் முழுதும் மாறி நாடே வளம்மிக்க நாடாக மாறிவிடும்.

உலகமெலாம் தயவு பெருகி பசிப்பிணி எனும் கொடும் துன்பம் விலகிவிடும். உலகமெலாம் ஆறுமுக அரங்கமகான் வகுத்துக் கொடுத்திட்ட முருகப்பெருமானின் வழிபாடு முறைகள் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு முருகப்பெருமான் வழிபாடு பெருகி தலைமை வகிப்போரும் முருகப்பெருமானின் பக்தர்களாக ஆகி உலகமெலாம் ஒன்றுபட்டு நாட்டின் தலைவர்களிடையே வேற்றுமைகள் மறைந்து வேற்றுமைகள் இல்லாத ஒன்றுபட்ட உலகமாக இந்த பேருலகமே மாறிடுமப்பா.

ஆதலினாலே உலகமாற்றம் தர்மத்தினால் ஆகும் என்றே எல்லையில்லா அறச்சேவைகளை செய்து உலகின் எல்லா நாடுகளும் தமது நிலைகளை மாற்றி தர்மத்தின் வழிதனை பின்பற்றிட செய்யுமாறு யுகமாற்றம் குறித்திட்ட மகத்துவம்மிக்க செயல்களை மிக உயர்வாக எல்லையில்லாது செய்து வருகின்ற வல்லமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனார் கூறும் தயவே அடிப்படையாக கொண்ட உயர்ஞான நெறியினை மக்களெல்லாம் பின்பற்றி கடைப்பிடித்து வரவர, அவரெல்லாம் வல்லமைமிக்க அருட்பெரும் சரவணஜோதிதனை ஏற்றி வழிபாடுகளை செய்து வரங்களை கேட்க கேட்க, வாழும் கலியுக மகா ஞானி முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வடிவினிலே உலகின் எல்லா சக்திகளும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக வெளிப்பட்டு அருள் புரிந்து நிற்குமப்பா.

உலக மகா சக்திகளெல்லாம் அரங்கன் வடிவினில் அருள்புரிந்து நிற்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலை பயபக்தியுடன் திருத்தாள் பணிந்து மண்டியிட்டு வணங்கி, அரங்கன் ஆற்றும் பசிப்பிணி மருத்துவமாகிய அன்னதான பணிகளுக்கு பொருளுதவிகளும் தொண்டுகளும் பணிவுடன் செய்து வருகின்ற மக்களின் வாழ்வினிலே அமைதியும், ஞானிகளின் அருள் பாதுகாப்பும் பெருகி, எல்லா வல்லமைகளும் அவர்களுக்கு கிடைத்து சர்வ வளங்களையும், ஊழ்வினைகளை வெல்லும் அற்புத சக்தியும் ஊழ் வெல்லும் மனோதிடமும் உடல்திடமும் பெற்று உலகையே ஆளும் வல்லமைகளையும் ஞானத்தையும் பெற்று சிறப்படைவார்கள் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கணநாதர்.

–சுபம்–